## DEPOSITIONS OF WITNESS

**(RULE.42 CRP-FORM NO.53)**
**CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE**
**IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE NO.III**
**COIMBATORE**

| | | | |
|---|---|---|---|
| Calendar | : | CC. 961 /2021 | **P.W.1** |
| Miscellaneous | : | | |
| Name | : | திரு. ஹக்கீம் | |
| Father's Name | : | | |
| Occupation | : | | |
| Village | : | | |
| Taluk | : | | |
| Religion | : | | |
| Caste | : | | |

Solemnly affirmed in accordance with the provision of the oath act 1969(central act 44 of 1969) on the 22nd **day of September 2023.**

22.09.2023

**முதல் விசாரணை**

1) நான் தற்போது திருச்சி ரோட்டில் உள்ள HDFC வங்கியில் சீனியர் மேனேஜராக பணிபுரிந்து வருகிறேன். எங்கள் வங்கியில் இருந்து வாடிக்கையாளர்களுக்கு வெவ்வேறு லோன் கொடுப்பது வழக்கம். மேற்படி லோனை மாதாமாதம் காசோலை அல்லது இ.சி.எஸ் பேமேண்ட் மூலம் வசூல் செய்வது வழக்கம். அந்த வகையில் அன்பரசு என்பவருக்கு கிரடிட் கார்டு லோன் வழங்கப்பட்டது. மேற்படி கிரடிட் கார்டு லோனுக்கு கடந்த 02.02.2021 ம் தேதி ரூ.54,634/- தவணையை இ.சி.எஸ் மூலம் கொடுக்கவேண்டியது, எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்று திருப்பம் ஆகிவிட்டது. மேற்படி திருப்பம் பற்றி எதிரிக்கு அனுப்பிய அறிவிப்பும் எதிரியால் 22.02.2021 ம் தேதி அனுப்பப்பட்டு அறிவிப்பு அவரால் பெற்றுக் கொள்ளப்பட்டது. எனவே எதிரி கொடுக்கவேண்டிய இ.எம்.ஐ தொகைக்காக எதிரி மீது 25 பேமேண்ட் ஆக்ட் படி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளேன். நான் தாக்கல் செய்துள்ள நிரூபண வாக்குமூலத்தை இதன் ஒரு பாகமாக கருத வேண்டுகிறேன். என் வழக்கிற்கு ஆதரவாக

கீழ்க்காணும் ஆவணங்களை தாக்கல் செய்கிறேன்.

1) நான் HDFC வங்கி சார்பாக வழக்குகளை நடத்த எனக்கு வங்கி வழங்கிய அதிகார பத்திரத்தை தாக்கல் செய்கிறேன். **(அதிகார முகவர் பத்திரம் அசலுடன் ஒப்பிட்ட நகல் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).**

2) எதிரி எங்கள் வங்கியில் வாங்கியிருந்த Credit card Loan க்கான பணத்தை ஒவ்வொரு மாதமும் ECS மூலம் திருப்ப செலுத்துவதாக ஒப்புக்கொண்டிருந்தார். 02.02.2021 தேதியிட்ட எதிரியின் வங்கிக்கணக்கில் போதிய பணமில்லை என்ற குறிப்புடன் ECS திருப்பம் ஆனதற்கான குறிப்பு தாக்கல் செய்யப்படுகிறது **(ECS திருப்பம் ஆனதற்கான குறிப்பு அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.).** மேற்படி திருப்பமான கடன் தொகையை செலுத்துமாறு எதிரிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு தாக்கல் செய்யப்படுகிறது. **(வழக்கறிஞர் அறிவிப்பு அ.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ).**

3) மேற்படி அறிவிப்பை எதிரி பெற்றுக்கொண்டதற்கான அஞ்சல் ஒப்புகை அட்டை தாக்கல் செய்கிறேன். **(அஞ்சல் ஒப்புகை அட்டை அ.சா.ஆ. 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.) .** மேற்படி கடன் தொகையை எதிரி சட்டப்படி திருப்ப செலுத்த கடமைப்பட்டவர். எனவே இவ்வழக்கை அனுமதிக்குமாறு வேண்டிக்கொள்கிறேன்.

**<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை செய்ய வழக்கறிஞர் ஆஜரில்லாததால் குறுக்கு விசாரணையின்றி முடிக்கப்படுகிறது.

ஒ/ம். ஹக்கீம்

ஒ/ம். கிர்த்திகா,
குற்றவியல் நீதிமன்ற நடுவர் எண்.3,
கோயமுத்தூர்.

/ உண்மை நகல் /
குற்றவியல் நீதிமன்றம் எண்.3,
கோயமுத்தூர்.